உ

வேலுமயிலுந்துணை.



உமாமகேஸ்வரி

அகஸ்தியமுனிவருக்குத் திருவாய்மலர்ந்தருளிய

தேவியாரூடமென்கிற

பல விஷயங்களுக்கு விபரங்கூறுகின்ற

சத்தியாரூடம்.

இரண்டாம் பதிப்பு.

இஃது

ஆரூடகணித பரிசோதகர்

திருவல்லிப்புத்தூர்

விஜயராமலிங்கமூர்த்தி பிள்ளையவர்களால்

பரிசோதித்து

கோ. செல்வரங்கம்மாள் அண்டு கோ.,

சென்னை:

மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

இதன் விலை அணா-1.

உ

வேலுமயிலுந் துணை.

உமாமகேஸ்வரி

அகஸ்தியமுனிவருக்குத் திருவாய்மலர்ந்தருளிய

தேவியாரூடமென்கிற

பலவித விஷங்களுக்கு விபரங்கூறுகின்ற

சத்தியாரூடம்.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெற்றிமாதவத்தோன்கும்ப மெய்ம்முனி பதத்தைப்போற்றி
சத்தியா ரூடந்தன்னிற் றரும்பொரு டன்னையாய்ந்து
முத்தியாய் விருத்தநூறு மொழிவதற் கெனதுகாவா
லத்திமா முகத்தோன்செய்ய வடியினைச் சென்னிவைப்பாம்.

ஊர்வனவிஷஜெந்துக்களின் வரலாறு.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

பாதிமதியணிவேணியரனார்க்கஞ்சப் பதம்போற்றியேயுலகிற் பருவமாக, ஆதிபராபரையுமைமா தங்கிசத்தி யாரூட நீதிநெறி யறிவுதன்னை, வேதமுறையுரைத்தபடியிந்தப்பாரின் விஷவகைகளுறைத்திடுவேனனந்தன் தக்கன், சோதிமக பத்மன்வாசுகிகுளிகன் றுய்யசங்கபாலன் கார்க்கோடன்றானே. (க)

தானென்ற பத்மனொடு அட்டநாகம் சதிசெய்யுமேரத்த விரியன் கத்திரி, தானென்ற பெருவிரியன் புல்விரியனோடு சலவிரியன் குறுவிரியன் சாதியாறும், வானென்ற கொம்பேறு மூக்கன்சாரை வழலைகருவழலை சாணாகமூக்கன், பானென்ற புடையனொடு கரடனோலைப் பாம்புமயக் கரவமுடன் முறுக்குமணியனுமே. (உ)

மணியனொடு ரத்தமண்டலிநீர்ப்பாம்பு மண்டலியாஞ் சொறியனெறி செஞ்சேராவும், துணியனெனுமாநாக மண்ணுளியாமட்டைத் துய்யகருஞ் சோர்வுடனே தேளுஞ்செய்யான், கணிதமா மழற்சிலந்தி வண்டூரான் கரும்பனசை யோந்தியொடு கறுத்தச்செய்யான், பணியசொறித்தவளைபிலவங்கப்பூனை பச்சைநிறப்பாம்பு பெருச்சாளிதானே. (ங)

தானரனை நண்டுவாய்க்காலிசூரன் தனிக்குமெலி பதினெட்டு நரியுநாயும், ஊனென்றும்பூநாகஞ்சிவந்தஅட்டை யுலகத்திலின்னம்வெகு விஷமுண்டாக்கி, தானெனவே செய்தவயன்படைப்பினாலே தடையுண்டாமளவிலா வரனுஞ்சத்தி, பானுசெறி பூவுலகில் சித்தர்கூடிப் பலவிஷத்தின் பயந்தீர்க்கப் பரிந்துகண்டே. (ச)

ஔஷதங்களின் வரலாறு.

கண்டுகறைக் கண்டருமே யுமையாட்கன்று கைம்முறையாய் நசியமொடு கற்கஞ்சொன்னார், திண்டுமுண்டா மஞ்சனலே கியங்கள்மிக்கத்

திடமான குடோரியொடு வெண்ணெய்மாத்திரை, பண்டுகுழம் போடொத்தல் பூசல்துள்தான் பலருதமாமைகளுடன் கலிக்கம் பண்பாய், அண்டர்தொழ வேயுரைத்தா ரவனிமீது ஆத்தாளுமப்படியே யறைந்திட்டாளே. (௫)

அறைந்திட்ட குடுகுணங்கள் சாதிவாழ்க்கை, அரவின்பல் தூது லட்சணங்களெல்லாம், துறந்திட்ட நாள்நட்சேத்திரத்தின் செய்கைச் சூத்திரமாய்ச் சித்தராரூடந்தன்னில், நிறைந்திட்ட வகையறியா ராரூடமப்பா நீநிலத்தில் வெகுபேர்கள் பாடிப்போட்டார், சிறந்திட்ட மந்திரதந்திரங்கள்கோடி செப்பினுரிம்முறைபோற் செவ்வாகாதே. (௬)

செவ்வாகுஞ் சத்தியாரூடம்போலச் செப்பவில்லை நவநாத சித்தர்தாமும், இவ்வுலகில் குருமுறையாய்க் காட்டவேணு மில்லாட்டாற் பாவம்வரும் நரகில்வீழ்வார், கவ்வுகடி நோயாளிக் கிவர்கையாலே காட்டியிட்ட அவுழ்தமுங் காலனுகும், அவ்வகைக ளானதெல்லா மறிந்துதள்ளி யாராய்ந்து பார்ப்பவனே யையனுமே. (௭)

ஐயமில்லை யாசான்கை யறிவுண்டானால் அவனல்லோ சித்தனிரப் போலாடிவெல்வான், பொய்யல்ல சத்தியாரூடப்போக்குப் புத்திபுள்ள பேர்களல்லோ புலன்காண்பார்கள், செய்வதற் கிதுசூக்ஷமொன்றும் வேண்டாம் சித்தமாங்காரமெனுந் திரத்தைத்தள்ளி, பையவேகுருமுறையாய்ப் பார்ப்பானுகில் பராபறையாள் வந்துகரு பகருவாளே. (௮)

பகரொணு தொருகோடி கோடாகோடி பணமீந்தும் நாதாக்கள் பகர்ந்திடார்கள், இகல்பொருந்திச் சாஸ்திரத்தை யெடுப்பானுகி லீரேழுபிறப்புமட்டும் நரகமெய்தும், அகமாகா தொழுக்கமுட ஞசானுக்கு அன்னமிட்டு வடிபணிந் தடிமையாகில், ஜெகமறிய சித்தெல்லாஞ் சித்தியாகுஞ் சேர்ந்துதடா இவன்றனக்குச் சிவனெப்பாமே. (௯)

ஒப்பாகு மகேனுன்மணியா ளுரைத்தநூலை யுரைக்கொணுதுலகத்திலறிவில்லார்க்குக், கைப்பொருளென் றிக்கருவைக் கண்டபேர்க்குக் காசினியி லெப்பொருளுங் கையிற்காணும், தப்புவதொன்றேனுமில்லைதப்பொட்டாது சாவுபோம் விதியாளி தனக்குச் சிக்கும், அப்படியாமென்றுசொல்லியசந்திடாதே அகோரருத்திராஞ்சனத்தை யறையக்கேளே.

சகலவிஷத்துக்கு மகோரருத்திராஞ்சனம்.

கேளிரதம் பேய்ப்பீர்க்கின்சாற்றில்தோய்த்துக் கெடியாகவாளமொடுதுத்தம்தாரம், நீளவேவெண்காரம் தன்னைவாங்கி நேராகவிலைவையந்துஞ்சமனுய்க்கூட்டி, மாளவேபேய்ப்பீர்க்கின் சாற்றிலாட்டி வழித்துருட்டிக் காயவைத் தெடுத்துக்கொண்டு, பாழ்விடங்கள் தீண்டிமண்டைக் கொண்டாற்கண்ணிற் பதித்துவிடு பொறிப்பட்ட பஞ்சார்தானே. (௧௧)

சகலவிஷத்துக்கும் கண் கலிக்கம்.

தாளென்ற விந்துப்பு இரதங்காயந் தகட்டுஅரி தாரமிவை சமனுய்க்கூட்டி, ஏனென்றுசொல்லாமல் பேய்பீர்க்கின்சாற்றி லிறுகவரைத் துண்டைசெய் தெடுத்துக்கொண்டு, நானென்ற கண்ணிலிடு வுமிழ்நீராலே நாகமது*நாலெயிறுநாட்டினுலும், வானென்ற வண்டமதில் பரிதிகண்ட வாடையெனும் பனிபோலே வாங்கும்பாரே. (௧௨)

---

* நாலெயிறு - நாலுபல்.

சகலவிஷத்துக்கும் சித்தாந்த பீரிசமாத்திரை.

பாரடா சித்தாந்த பீரிசமாத்திரைப் பாடுகிறேன் மகிழவித்து தேவதாளிவித்து, நேரடா பேய்ப்பீர்க்கின் வித்துச்சூதம் நேர்வாளமிவையைந்துஞ் சமனாய்க்கட்டி, ஏரடா* சம்பீரச் சாறுவிட்டு எட்டுநாளூரவைத்து எட்டாநாளில், சீரடா பயறுபோலரைத்துருட்டித் திரமாகநிழலுலர்த்தி வைத்துக்கொள்ளே. (௧௩)

வைத்துக்கொள் விஷந்தீண்டிச் சீவன்போனால் வாகானகையான் சாறெருக்கஞ்சாற்றில், வெற்றியாயொருகுளிகை யுரைத்துக்காதில் விட்டடைக்க மறுசெவியில் காந்தல்காணும், மெத்தவே காணாட்டால் மூரிதன்னில் விரைந்தரைத் தொருவுருண்டை விழியிற்போடு, முத்தியாய்ப் புதுச்சீலை நனைத்துமூடில் மூன்றேகால்நாழிகையில் முழிப்பான் காணே. (௧௪)

ச-வி-ம், சுடுகாடுமீட்டான் குளிகை.

காணப்பர் காலன்கடி யெங்கேபோச்சு காசினியில் விஷமிஞ்சிச் சாவாரில்லை, வீணப்பா வென்றெண்ணாதே வேகமெத்த விருதுகட்டிப் பார்ப்பதற்கு விருதுபோடு, ஊணப்பா யின்னமொருகுளிகைசொல்வேனுறுதியடா சுடுகாடு மீட்டானப்பா, நாணப்பா நாவிரசங் காயங்கோஷ்டம் கல்வாளப் பருப்பழிஞ்சிப் பருப்பும்பேயே. (௧௫)

பேய்ப்பீர்க்கின்வித்து † காஞ்சிரையின்வித்து பேர்சமனாய்த் ‡தேசிக்காய்ச் சாறுவிட்டு, ஓயாமலொருசாம மரைத்துருட்டி யுண்டைசெய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு, தீயானகாலவிஷந்தலைமேற்கொண்டால் சிறுநீரிலுரைத்திடுவாய் கண்ணிலேதான், ஓயாதவிஷமொடுங்கி பயந்தேயோடும் ஓகோகோ யுற்பனமா யுரைசெய்தேனே. (௧௬)

ச-வி-ம், சங்காரவயிரவனுண்டை.

செய்வகைகேள் சங்காரவயிரவனுண்டை செப்புகிறேன் ০ பூவந்தியெட்டிக்கொட்டை, பொய்காய =மிளகிலிப்பைப் பிண்ணாக்கோடு புகழான தக்காளிவே ரழிஞ்சில்மூலம், வைசமனாய் வாங்கியதை வஸ்துவாலே வடிமெழுகு போலரைத்து மணிபோற்செய்து, கைமுறையாயுரைத்ததனைக் கண்ணிற்போட காலனுமே மீளுமடா கருதிப்பாரே. (௧௭)

ச-வி-ம், கண்ணுக்கு கிரீடியஞ்சனம்.

கருதிப்பார் கிரீடியஞ்சனத்தைச் சொல்வேன் கைகண்ட முறையிதுதா னெல்லடையாஞ் சூதம், பொருதப்பா அவுரிச்சார் விட்டுஆட்டிப் போட்டிடுவாய்நெல்லினிடைக்கண்ணிலேதான், அரிதப்பாகாலனென்ற விஷங்கள்மிஞ்சி யடங்கியேகிடந்தாலு மலறியோடும், விருதப்பாபோட்டுப்பா ரிதுவோகெட்டி வெகுசுளுகு வெகுசுளுகு விஷங்கள்போச்சே.

ச-வி-ம், பேய்ப்பீர்க்குத்தூர்.

போச்சுதடாபேய்ப்பீர்க்கின் + தூருக்கப்பா பொய்யல்ல கதிரவனுட் பூசித்தேதான், வாச்சுதடாவலஞ்சுற்றியெடுத்துவந்து வைத்துக்கொள்மறுசட்டி யளவுதானும், காச்சுதடா நல்லெண்ணெய்தன்னிலேதான்

---

* சம்பீரம் - எலுமிச்சம்பழம். † காஞ்சிரை - எட்டி. ‡ தேசிக்காய் - எலுமிச்சம்பழம். ০ பூவந்தி-மணிப்புன்கு. = மிளகு-இலுப்பை. + தூர் - வேர்.

கீருகாமலீந்திடுவாய்ச் சணநேரத்திற், போச்சுதடா விஷமென்னப் பட்டதெல்லாம் பொழுதுகண்டப் பனிபோலப் போகுங்காணே. (கக)

ச-வி-ம், ராமபாணாதி மாத்திரை.

காணவே ராமபாணாதிமாத்திரை கழறுவேன்வாலைரசந் துருசுதுத்தம், கோணவே * சிலை † தாரம் ‡ வெள்ளைலிங்கந் துடியானகௌவுரி கெந்திகாயஞ்சுக்கு, பூணவே மிளகுசித்திர மூலம்வாளம் புகழ்கெந்தந் தாளிவித்து தேவதாரம், கோணாத = சேவகனார்க்கிழங்கு ० தாயைக்கொன்றானும் வெள்ளைக்காக் கணமுங்கூட்டே. (உ0)

கூட்டுவா யாகாசகெருடன்கிரி கொடியபித்து மயில்பித்து வெள்ளாட்டின்பித்தும், மாட்டுவாய்ப் பச்சைப்பாம்பின்கழுத்தும் வளமான ரசயேனிச் சாற்றிலாட்டி, தேட்டமா யிவையெல்லாஞ் சமனாய்வாங்கித் தெளியவே மேனிச்சா றதனாற்பின்னும், ஆட்டுவாய்க் கல்வத்திலிட்டுச் சாமம் அரைத்துருண்டை செய்துவைப்பா யடக்கத்தானே. (உக)

உயிர் - அடக்கம்.

அடக்கமதைக் கண்டெழுப்ப வகையைக்கேளு மடவாக வுச்சியுயிரடங்குமாகில், திடத்துடனே பார்த்துநன்றாய் குடோரியாடித் தேய்த்திடுவாயொருகுளிகை தேய்த்துப்பின்னும், குடத்தின்வாயோடழித்தித் தீயைமூட்டிக் கொளுத்திடுவாய்க் கொடியவிஷங் குலைந்தேயோடிச், சடத்தைவிட்டுப் போனவுயிர் வந்துதோன்றுஞ் சபைமெய்க்குஞ் சத்தியமே சார்ந்துநாடே. (உஉ)

ச-வி-ம், நசியம்.

நாடப்பா வெண்கார மழிஞ்சிவேர்கோஷ்டம் நல்லவெள்ளைக் காக்கணம்வேர் காய்ப்பழமுங்கூட்டி, வாடாமல் சமனாக வரைத்துவைத்து வல்விஷங்கள் தலைக்கொண்டாற் கொள்ளுப்போலே, மோடியுடன் கொடுமூக்கில் நசியங்கண்ணின் முழியிலிடுவாய் விஷங்கள்தான் முறிந்தேயோடும், பாடுபட வேணுமென்றால் பாருபஞ்ச பாணமெனுங் குழம்பினுடத் துடியைப்பாரே. (உந)

ச-வி-ம், பஞ்சபாணக் குழம்பு.

துடியிரதம் ०பூவந்திப் பழமும்வாளந்துருசு சமனாய்நிறுத்துமே தேங்காய்ப்பாலில், வடிமெழுகுபோலரைத்துக் கரண்டிதன்னில் வைத்தெரித்துக் குழம்பானவாறுப்பார்த்து, கெடியாகவாறவைத்து மேதிக்கொம்பில் கெட்டியாய் விஷங்களுக்குப் பத்திரஞ்செய்து, திடமாகப்பயறளவுவெற்றிலையில்நல்கி தீர்க்கமுடனவைதனிற் றேய்த்திடாயே. (உச)

ச-வி-ம், சிந்தாமணி லேகியம்.

தேய்த்திடுவாய் விஷந்தணிந்து பேதியாகுந் தீர்த்தபின்னுமோரன்னமுண்ணச்சொல்லு, நேத்திசிந்தாமணி லேகியத்தைக்கேளு நினைவா

---

* சிலை - மனோசிலை. † தாரம் — தாளகம். ‡ வெள்ளை-வெள்ளைப் பாஷாணம். = சேவகனார்க்கிழங்கு - பேய்வெண்காயம். ० தாயைக்கொன்றான் - வாழை. 0 பூவந்தி-மணிப்புங்கு.

க்க * காஞ்சிரையின் பழத்தைவாங்கிப், பார்த்ததின் † ரோடகற்றி வி த்துபோக்கி பழச்சாறு படியதனில்மேனி ‡ மத்து, மாத்திரமோ + தலை விரிச்சான் வேளைநீலிவளர்வேலிப் பருத்திப்பேய்ப் பீர்க்குமாமே. (உரு)

ஆமடாவகையொன்றுக் கெண்சிரங்கை யாட்டியெடுத்தேகுழம்பி ல்விட்டுக்காய்ச்சி, ஓமடாகுறுகிவரும் பதத்திற்போட வுரைக்கிறேன் சனிநாயிறு சேர்ந்திருதம், நேமடாவெண்ணுவி லிங்கந்துரிசுதுத்தம் நெ றிவிஷமுமிளகுசுக்குவாளமோடு, ஏமடாவரிதாரம் வகைக்கோர் விரா கன் எடுத்திடித்தே வக்குழம்பி னுள்ளேபோடே. (உசு)

போட்டுவயக் கறண்டியினூற் கிண்டிக்காய்ச்சி புகழாகத்திரள்பதத் தில் கல்வத்திட்டு, நாட்டிநல்லெண்ணையது விட்டுஆட்டி நலமானலேகி யத்தை மேதிக்கொம்பில், பூட்டியேபத்திரமாய்க் கடிகள்பார்த்துப் புக ட்டிவிடு குன்றிமணியளவதாக, நாட்டிலே விஷமிகுத்துச் சாவாரில்லை நல்லதடா லேகியந்தா னுடிப்பாரே. (உஎ)

ச-வி-ம், சஞ்சீவி யுண்டை.

பாரடாவுயிர்தருஞ் சஞ்சீவியுண்டைப் பகருகிறேன் துரிசுதுத்தமி ளகுசேர்த்து, சேரடாவாளமந்த நிறைக்குப்போட்டு நினைவாக எலுமிச் சம் பழத்தின்சாற்றை, வாரடாமூன்றுநா ளூரவிட்டு வடித்தெடுத்து நா லாநாளச்சாற்றுலே, சேரடா வரைத்துண்டை செய்துகண்ணில் தேய் த்துவிட எவ்விஷமுந் தீர்ந்துபோமே. (உஅ)

ச-வி-ம், நீலகண்ட சூரணம்.

தீர்ந்துபோம் நீலகண்ட சூரணத்தை செப்புவேன் வாளமதுபல மோநாலு, காய்ந்தபேய்ப் பீர்க்கின்வித்துப் பலமோநாலு கறிமிளகுபல மொன்றே கால்தான்சுக்கு, ஓய்ந்தபலமதுவொன்று நாபிமுக்கால்உயர் கெவுரிவிராகனிரண்டுண்மையாக, ஆய்ந்தவெள்ளைப் பாஷாணம் விரா கனிரண் டரிதாரம்விராகனிரண்டபினிரெண்டே. (உகூ)

ரண்டுகோற்படி யெருக்கம்பால் பேயத்தி நலமானபடியரைக்கால் படியாலம்பால், கொண்டுவாபடியரைக்கால் கொடிக்கள்ளிப்பால் கூட்டு முறையரைக்காலாந் தில்லைப்பாலும், கண்டுபார் காட்டெருமைப்பாலா ழாக்கு கனசேந்திப்பாலரைக்கால் படியாழாக்கு, மிண்டியதோ o ருத்தம தாளிப்பாலு மிகக்கொணர்ந்து முன்சொன்னமருந்தைப்போடே. (௩௦)

போடதனிலூறவே யூறிப்போகும் பின்னெடுத்தெட்டாநாளுலர்த் திக்கொண்டு, வாடாமற் சூரணித்து வைத்துக்கொண்டு வருந்தியேகா செடைதான் மூக்கிலூதி, யீடாகவமுரியிலே ரெண்டுகாய னெடைப் போட்டுத்தான் கலந்திடுவுள்ளுக்கு, நாடாது காலவிடம் நடுங்கியோடும் நாதாக்க ளுரைப்பார்கள் நல்லவித்தை. (௩க)

ச-வி-ம், விநாயக நசியம்.

வித்தையடா விநாயகனூர் நசியங்கேளு மிளகுள்ளி வசம்புகுன்றி புப்புக்காயம், சித்தடாகழற்சியுடப் பருப்புங்கூட்டிச் சிறுநீரிலேநறுக்கி நசியம்பண்ணு, பத்தியதோர் விஷமெல்லாம் பறந்துபோகும் பண்பாக நவநீத குளிகைகேளு, சுத்தரதே ரசமேனிச் சாற்றிலாட்டி சுழலாதே நாவிவெண்காரங்கூட்டே. (௩௩)

---

* காஞ்சிரை-எட்டி. † தோடகற்றி-ஓட்டைநீக்கி. ‡ மத்து-ஊமத்து. + தலைவிரிச்சான் - சாரணை. o உத்தமதாளி - வேலிப்பருத்தி.

ச-வி-ம், நவநீதகுளிகை நசியம்.

கூட்டியேசமனக தேங்காய்ப்பாலில் குழுறவுரைத்தொருசாமம் வ ழித்துக்கொண்டு, தீட்டியேபயறளவு வுள்ளுக்கீவாய் தீராத விஷமெல்லாந் தீர்ந்துபோகும். தாட்டிகமாய் நசியமொன்று சொல்லக்கேளு தானெருக்கம் பழுப்பின்சாறமுறியோடு, பூட்டியேகாயமதிற் சேர்த்துக் கொண்டு புகுதவிடு நாசியிலே விஷங்கள்போமே. (கூ)

ச-வி-ம், குடோரி குழம்பு.

போமடாகுடோரியென்னும் குழம்புசொல்வேன் புதியரசம்வெண் காரம்வாளம்தானும்,ஆமடாமுன்போலே முரிசூதத்தை அடவாகவகை நாலுஞ்சமனய்க்கூட்டி, ஓமடா கோவின்பா லதனலாட்டி யுகந்துவைத் துப்பயறளவு வுள்ளுக்கீவாய், நாமடா சொல்லவில்லை யரனர்சொன்னர் நாடிப்பார் விஷமெல்லாம் நடுங்கிப்போச்சே. (கச)

ச-வி-ம், மகாகிரீடி குழம்பு.

போச்சடா மகாகிரீடி குழம்புசொல்வேன் புதியரசம் வெண்காரந் துருசுநாவி. ஆச்சுதடா தேங்காயின் சிரட்டைச்சுட்டு அஞ்சுசமன்கண் டெடைக்குவாளங்கூட்டி, வாச்சுதடா கோவின்பால் விட்டரைத்துவைத்துக்கொள் பணவிடைதான் வகையாய்நல்கு, ஏச்சுதடா விடமெங்கே கிரீடிகண்டா லிருந்தவிஷம் விட்டோடி யிறந்துபோமே. (கரு)

ச-வி-ம், சஞ்சீவிக் குழம்பு.

இறந்துபோம் சஞ்சீவிக் குழம்புசொல்வே னிரதம்வெள்ளை நாவி கெந்தி துருசுதேங்காய், துறந்திடுவாய்ச் சிறட்டைகரி வெண்காரத் தோடு துடியாக வகைவகைக்கு விராகனுவு, சிறந்திடுவாய் நேர்வாளம் பலமூன்றேகால் சேர்த்திடித்துக் கோவின்பால் விட்டுஆட்டி, அறந்தழைக்குங் குழம்பதனைப் பதத்தில்வாங்கி யடைத்துவைப்பாய் மேதிபுடக் கொம்பில்தானே. (கசு)

தானனகாலவிடந் தலைமேற்கொண்டால் தயங்காதே பணவெடை தான்சணத்தில்நல்கும், ஆறுலுஞ்சொல்லுகிறேன்சஞ்சீவிகண்டா லரைக்கடிகைதரிக்கா தகலவோடும், கானகத்திற்றீக்கொளுத்துங் கதைபோல காலவிஷந்தான்பயந்து கதறியோடும், மானனையாள்சொல்லுகின்றகோடாசூரி வன்குழம்பைச் சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளே. ()

ச-வி-ம், மோடாசூரிக் குழம்பு.

கேளப்பா துரிசுரசங் கெந்திபாஷாணங் கெடியாகவெருக்கம்பால் வார்த்தரைத்து, மீளவேவழித்துநன்றாய் வைத்துக்கொண்டு மிஞ்சிய தோர்விஷந்தனக்குக்காசுவீதம், சாளயமாய்ப்போகாதுவுண்ணச்சொல்லு சடுதியிலேவிஷமெல்லாந்தானேயோடும், வாளதுபோற்கொடுஞ்சுருக்குநஞ்சிற்பாய்ந்தான் மாத்திரையைச் சொல்லுகிறேன் வரிசைகேளே.

ச-வி-ம், நஞ்சிற்பாய்ந்தான் மாத்திரை.

வரிசையதுசொல்லுகிறேன் நாவிசூதம் வளமான துரிசுதுத்தம்வாளந் o தாரம், தரியாத * சிலைகுன்றிப் பருப்பும்வெள்ளைச்சாரணைவேர் † மகிழ்பருப்புபச்சைப்பாம்பின், ‡ சிரங்கூட்டிச் சரிசமனய்ச்=சம்பிரச்

o தாரம்-அரிதாரம். * சிலை-மனேசிலை. † மகிழ்பருப்பு - மகிழன் விரை. ‡ சிரம்-தலை. =ரம்பிரச்சார்-எலுமிச்சன்சார்.

சாற்றெளிவாகவிட்டரைநீ கல்வத்திட்டு, உரித்தானவெண்காரங் கூடப்போட்டு உகந்து * திரிநாளரைத்து உண்டைபண்ணே. (௩௯)

பண்ணியே நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு பாரவிடந் தீண்டிமிகத் தலைமேற்கொண்டால், திண்ணமாயுச்சியிலும் † நுதலிலேயுந் திடமானபிடரியிலுங் கன்னத்தேயும், நண்ணுகக்கீறிவைத்துக் கட்டும்போது நாகவிடமுதற்கொண்டு நகித்துப்போகும், புண்ணியமா மலைக்காத்தான் மாத்திரைக்கேளு புதியதுத்தர் துரிசுசிலை காயந்தானே. (௪0)

ச-வி-ம், மலைக்காத்தான் குளிகை.

தானென்றவாளமரிதாரங்கெந்தி சாதிலிங்கம் நாவிவெள்ளைகெவுரிருதம், ஏனென்றதொட்டியொடு எலிபாஷாணம் ‡ எரிமிளகுகுதிரைப்பால் பாஷாணந்தான், வானென்ற திப்பிலியோ டிவைகளெல்லாம் வளமாகச்சமன்கூட்டி மேனிச்சாறு, நீநினைவாய் விட்டரைத்து வுண்டைப்பண்ணி நிழலுலர்த்தி மிளகுபொடி தன்னிற்சேர்த்தே. (௪௧)

ச-வி-ம், கருடாஞ்சனம்.

சேர்த்துமுன்முறைபோலே குடோரியாடி செப்பமுடன்கட்டிவைக்கவிஷங்கள்போச்சு, கீர்த்திபெறக் கெருடவஞ்சனத்தைக்கேளு கெருடக்கல் விந்துப்புதுருசுதுத்தம், நித்துமேஅஞ்சனக்கல் வெண்காரந் தாரம் நீங்காதமுருங்கைவித்துச் சுக்குருதம், பார்த்திபனே 0 யெரிமிளகுதிப்பிலியுஞ்சங்கு பண்பானகெந்தியொடு செம்புமாமே. (௪௨)

செம்புடனே வகைவகைக்குப்பலமொவ்வொன்று திறமானவாளமதுபலமோரண்டு, அம்புலியிலிவைக்கூட்டி யிஞ்சிச்சாறு மடவானதேசிக்காய்ச் சாறும்விட்டு, கெம்பீரமாயரைத்து மணிபோற்செய்து கெடியாகநிழலுலர்த்தி வைத்துக்கொண்டு, வெம்பியதோர் விடந்தீண்டிமண்டைக்கேறில் விரைந்துரைத்துக் கண்ணிலிடவிஷங்கள்போச்சே. (௪௩)

ச-வி-ம், பரஞ்சோதிமை.

போச்சிந்த பரஞ்சோதி யென்னுமைதான் புகழான மகிழ்வித்து அழிஞ்சிவித்து, வாச்சிந்த வெண்குன்றி பருப்புவாளம் வகைநாலுவுள்ளி ¶ குக்கில் கெவுரிதாரம், நீச்சிந்த நவாச்சாரந் திரிகடுகுநாவி நெறிவிஷம்வெண்கார மனோசிலையும்லிங்கம், ஆச்சிந்தபொன்மெழுகு + தில்லைமணிரெண்டு மழகானசீனகாரம் துருசும்வாங்கே. (௪௪)

வாங்கியே வகைவகைக்குக் கழஞ்சுவீதம் வளமானகேந்திரச மொவ்வொன்றுக்கும், ஓங்கியேஎலுமிச்சம்பழச்சார் தன்னை யுறுதியாய்விட்டரைப்பா யைந்துநாள் தான், பாங்குடனே ரவியில்வைத்தெடுத்துக்கொண்டு பண்பாகவாய்க்குவிந்த பீங்கானுக்குள், தாங்கியே வைந்தனடந்தெடுத்துநித்தந் தயவாகப் பணவெடைவெற் றிலையிலீயே. (௪௫)

ஈந்திடவேகுஷ்டவகை பதினெட்டும்போம் யெரிவிரியன்வகையாறாகமெட்டும், காய்ந்திடுமண் டெலிநாலுங் கடுவிடங்கள்பூரான் கதறுமடாசெவ்வெட்டை முதலை = மூஷி, ஆய்ந்தரணை விற்புருதியாறுமோடுமப்பனே சந்நிபதின் மூன்றுமோடும், சேர்ந்தபிணி யிதுவெல்லாந்தீமெமூகாய்ப்போகும் திறமானபரஞ்சோதிமை திடமாங்காணே. (௪௬)

---

* திரிநாள்-மூன்றுநாள். † நுதல்-நெற்றி. ‡ எரி-சித்திரமூலம். 0 யெரி-சித்திரமூலம். ¶ குக்கில் - மைசாட்சி. + தில்லைமணி - தில்லைவித்து. = மூஷி – பெருச்சாளி.

திடமான மையிதுதான் தேசமெல்லாஞ் ஜெயஸ்தம்பம் நாட்டி வைக்கும் விருதுபோடு, விடமீட்க வல்லருனக் கெதிரியில்லை வீணை வுலகுதனில் மைதான்மெத்த, படிக்குள்ளே யிம்முறைபோ லெதுவு மில்லை பார்ப்பதற்கு யிதுசுளுகு பண்பாய்ப்பாரு, நொடிக்குமுன்னே நோய்விஷங்க ளோடிப்போகும் நூறுண்டு காலமட்டுங் கீர்த்தியாமே.()

நாட்பட்ட விஷத்துக்குண்டை.

கீர்த்தியாய்வெள்ளெருக்குச் சிறியாநங்கை கொடிவெள்ளைக் காக்க ணம்வேரிவைகள்மூன்றும், பார்த்திபனே வகைக்குப்பாக்களவரைத்து பரிவான தேசிக்கா யளவுமெல்லம், நாற்றிசையுமெய்த்திடவேமைந்தா கொள்ளு நற்குருவையரிசிசாத முண்ணச்சொல்லு, மூர்த்திக்கும் நாட் சென்ற விஷங்கள்போச்சு மூன்றுநாள் ராப்பகல் பத்தியமதாமே (௫அ)

விரியன்கடித்த புண்ணுக்கு மருந்து.

பத்தியமாம் பாவட்டையிலை வேகவைத்துப் பண்பாக வெந்நீரிற் கழுவிப்போடு, வெற்றியா மவ்விலையை நன்றாய்க்கட்ட விரியனது கடி வீங்கி வெடித்தப்புண்கள், சுத்தமாயாறிவிடுஞ்சொன்னேன் கேளு சூரா திசூரனைத்தான் சொல்வேனப்பா, நித்தியமாம் * ராச்சொல்லான் பல மேவாங்கி நெடியபேய்ச் சுரைசெடியை நின்றுபாரே. (௫௯)

௸-வி-ம், சூராதிசூரன்.

பாரேநீ கொடிகளொன்று மருமலேதான் பருதிநாட் காய்க்குடை ந்து *ராச்சொல்லானைச், சேரவே வைத்தடைத்துச் சதையால்மூடி செடிச்செத்து வுலரமட்டும் போட்டுப்பாரு, வாரமதிலேயெடுத்து வை த்துக்கொண்டு வசம்புள்ளி விரையளவு அரைத்துநீரில், ஊறவேநாக்கி லிட்டு வுள்ளுக்கீவாய் ஓடுமேவிஷமுறிந் துடலைவிட்டே. (௬0)

௸-வி-ம், களிக்குழம்பு.

விட்டுவிடுங் களிக்குழம்பு சொல்லக்கேளு விரைபோக்கிப்பழைய புளி பலமேவாங்கி, திட்டமாய்க் † காஞ்சிரையின் றூர்குடைந்து செல் வாயிலுள்வைத்துச்சிராயால்மூடி, திட்டமாய்மண்டலந்தா னிருந்தபின் பு செவ்வாயிலேயெடுத்து மேதிக்கொம்பில், கட்டிவைத்துக்கொள்ளதி லே கைபோடாமல் காஞ்சிரையின் கம்பதினால் கரண்டிவாங்கே. (௬௧)

௸-வி-ம், சூரெண்ணெய்.

வாங்கிவிடு புளியம்விரை யளவுதானே வாகான வல்விஷங்கள் வெள்விற்றூனால், தாங்கியதோர் நாக்கிலே தடவும்போது தட்டுகெட் டோடுமடா தலம்விட்டேதான், ஓங்கியதோர் சூரனெண்ணெய் யுரைக் கக்கேளு யுயர்புங்கினெண்ணெய் வேப்பெண்ணெய் விளக்கெண்ணெ ய், பாங்குடனே நல்லெண்ணெய் யிலுப்பையெண்ணெய்ப் பண்பாக வகைக்குழக்காற் படிதான்வாங்கே. (௬௨)

படிரண்டுஆலின்பா லொன்றரையாய்க் காய்ச்சிப் பாலுக்குள் ளெ ண்ணெய்மூப் புரண்டிமேனிச், செடியானமுடக்கன் ‡ முத்திருக்கஞ் செவியும் சேரவகையொன்றுக்குப் பலமோரண்டு, அடிவெள்ளை யெரு க்கன்பாற் படியேவாங்கியதிலரைத்து அவ்வேரைப் பிழிந்துகொண்டு, வடிகட்டி விட்டெண்ணெய் தன்னிற்பாதி வாருவண்டு கொல்லிப்பட் டை பல மொன்றுபோடே. (௬௩)

---

* ராச்சொல்லான்-கறிவேப்பு. † காஞ்சிரையின்றூர்-எட்டிவேர்.
‡ முத்திருக்கஞ்செவி - நிலக்கடம்பு.

போமோம்பட்டைபலம் ரெண்டுகேந்தி புகழ்துரிசுதுத்தந்திப்பிலி யின்மூலம், ஈடிரதங்கருவங்கமீருள்ளியோடு ஏழ்வகைக்கோர் விராக னென்று கெவுரிவெள்ளைதாரம், நாடியவெண்காரமிவை வகைக்கரை யாம்விராகன் கலமானமிளகுளரி கடுகிேனுடு, வாடாது வகைவகைக்கு விராகன் ரெண்டரையாம் வளமாகப்போட்டிடுவாய் மகிழ்ந்துதானே.()

தன்னிலே கடுகுரோகணியுந்தானும் தயவாகவொன்றரை விராகன் போட்டு, முன்சொன்னவேர்கூட்டி நீருவிட்டு முறையாக மருந்தையெ ல்லா மறைத்துப்பின்னும், நன்னயமாயெண்ணெய்தனிற் போட்டுநன் றாய் நயமுடனேதீயெரித்து நற்பதத்தில்வாங்கி, குண்ணுமல்நந்தியுடப் பூசைசெய்து கூட்டிவைத்தோர் காசளவுகொடுத்திடாயே. (௫௫)

ச-வி-ம், கியாழம்.

கொடுத்தபின்பு பத்தியந்தான் கெட்டிகெட்டி கூசாதே கடுகெண் ணெய்மேலிவிட்டு, யிடித்துவிடு கைபாதஞ் சூடுகொண்டால் பின்மூன் றுநாள்விட்டு நாலாநாளில், திடத்துடனே * கொடுப்பைசிறு தீரைவே ரைத் தெளிவான கழுநீரில் வேகவைத்து, விடத்துமத்தக்கியாழத்தை விரைந்திறுத்து விசேஷமாய் நெய்யைவிட்டு விரும்பித்தாக்கே. (௫௬)

தாக்குவாய்மறுநாளிற் பால் படிதான்ரெண்டு தயங்காமற்காச்சிய தே தயிராய்த்தோய்த்து, ஆக்கமாய்வடிகட்டி யந்தநீரி லடவாக ஈருள் ளிச் சீரகமுங்கூட்டி, ஊக்கமாயரைத்து நன்றாய்க் குழப்பிக்கொண்டு உண்டுவரச் சொல்லப்பா ரண்டுநேரம், தூக்கியதோர் கடிவிடங்கள் தொண்ணூற்றாறும் தூற்றமரம்போலே துலங்துபோச்சே. (௫௭)

எலிவிஷம் பதினெட்டுக்கும் மந்தாரகாசம் சுவாசகாசத்துக்கும் மருந்து.

வேறு.

போச்சுது மூவாறெலிக்கும் பொருந்திய மருந்துகேளு
வாச்சிது புங்குவெள்ளைக் காக்கணம் பிராய்வேர்மூன்று
ஆச்சிது சமனாய்க்கூட்டி யரைத்தாவின் பாலிற்கொள்ள
மாச்சுது சுவாசகாச மந்தார மெலியும்போமே. (௫௮)

போமடா பத்தியங்கெட்டிப் ‡ பெருங்குளப் பாலைமூலம்
ஆமடா பாலிற்கொள்ள மூன்றுநா ளாறேபத்தியம்
ஓமடா எலிவிஷங்க ளோடுமே புளிமாத்தின்
நாமடா சொன்னேம்பல்லி நலம்பெறக் கொண்டுவாவே. (௫௯)

கொண்டுவா வசம்புவுள்ளி கூட்டிநல் லெண்ணெய்விட்டு
விண்டுமே யெரித்துமூன்று நாட்கொள வறுநாட்பத்தியம்
பண்டெலிப் பதினெட்டுந்தான் பறந்திடும் பண்பதாக
அண்டர்கள் போற்றவின்ன மறைகிறே னெலிக்குத்தானே. (௬0)

எலிக்கடிக்குக் குடிநீர்.

தான்புதுச் சட்டிதன்னில் தயவாயோர் படிநீர்விட்டு
¶ ஏனலி னிலைப்பழுப்பு மேவெட்டுக் காவிச்செம்பு
கான்தரு நீறிற்போட்டுக் காய்ச்சியே யுழகுத்தண்ணீர்
ஓமா வென்றுசொல்லி யுண்டிரு மூன்றுநாளே. (௬௧)

---

* கொடுப்பை பொன்னாக்காணி. ‡ பெருங்குளப்பாலை - நஞ்சு முறித்தான். ¶ ஏனலினிலை - ஆலிலை.

நாளது கொடுப்பாய் மூன்று ஆறுநாள் பத்தியம் வைப்பாய்
மீளாத எலிவிஷங்கள் மிகுந்திடுந் தொண்ணூற் றாறும்
மாளவே யோடிப்போச்சு மந்திரம் வாலையாகும்
நீளவே செபித்துப் பூசை நீசெய்து குடிக்கச் சொல்லே. (௬௨)

எலிகடி மருக்கும் பேதியெண்ணெய்.

சொல்கரு வேலம்பட்டைச் சாறுள்ளி யுப்புழக்கு
நல்லெண்ணெய் தன்னைவிட்டு நவச்சாரம் பணந்தான் போட்டு
வெல்லவே யுழக்காய்க் காய்ச்சி விடிந்துண்ண பேதிகாணும்
வல்லெலி பதினெட்டுந்தான் வலியவிட் டோடிப்போமே. (௬௩)

ஓடிப்போ மமுக்குராவேர் எலுமிச்சங் காயின்வீதம்
பாடியே யரைத்துப்பாலிற் குடியெலி பதினெட்டும்போம்
சாடிய துரிசுமூன்று சகஸ்திர பேதிரண்டு
நாடிய விராகன்வீதம் நல்லெருக்கம் பால்விட்டாட்டே. (௬௪)

ஆட்டிநீ வழித்துமாத்திரை யாக்கிவெற் றிலையின்சாற்றிற்
கூட்டியே கொடுக்கச்சொல்லு விஷங்குலைந் தோடிப்போகும்
நாட்டினி லுரைக்கொணுது நாட்சென்ற எலிகட்கெல்லாம்
வாட்டிய புங்கம்பட்டை மிளகுள்ளி வசம்புபோடே. (௬௫)

வசம்பது கூட்டித்தேசிக் காய்பழச் சாற்றாலாட்டி
நிசமுடன் கொதிக்கவைத்து குடிக்கவே தீருந்தீரும்
விசைவிளா வேர்ப்பருத்தி வேருமெள் ளெண்ணெய்விட்டு
திசையுடன் கொதியிட்டுண்ணு சேரெலி விஷம்போம்நீரே. (௬௬)

சேரெலி விஷத்துக்கு மருந்து.

நீர்முள்ளி விரையரைத்து நல்லெண்ணெய் விட்டுக்கிண்டி
சேரவே திரட்டியுண்ணச் சேரெலி விஷம்போம்சுக்கு
கார்சிறு மிளகுதேசா வரங்களிப் பாக்குஞ்சேர்த்து
கூர்கரு வேலம்பட்டைக் குமரியின் சருகுபோடே. (௬௭)

போடுநீ வகைவகைக்குப் பொருந்துகாற்பலமேபோடு
ஏடவேகாய்ச்சிநீரில் எள்ளெண்ணெய்விட்டொன்றாக்கி
நாடியேகொடுக்கச்சொல்லு நற்புள்ளிமானின்றோலை
ஓடியேகருகச்சுட்டு வுயராவின்பாலிற்கொள்ளு
வாடவேவேண்டாம்பத்தியம் வருமெலிக்கடியும்போமே. (௬௮)

வண்டுகடிக்கு மருந்து.

வேறு.

போமடாபிராயின்பட்டை யிடித்துக்கொண்டு பெருங்குருவைமா விற் கொழுக்கட்டைசெய்து, நேமமாய்ப்புதுச்சட்டிக் குள்ளேவைத்து நீநினைவாய்க்கீழ்மேலும் பட்டைமூடி, ஆமடாவேடுகட்டி யவித்திறக்கி யப்பனேயெடுத்துக்கொண் டருந்தச்சொல்லு, நாமடாசொன்னோம் வண்டு கடிகளெல்லாம் நாசமாமின்னமொரு வகையைக்கேளே. (௬௯)

இதுவுமது.

வகையென்னபுற்றின்மேல் விழிவேர்ப்பட்டை வாங்கிவர்தாவின் பால் விட்டரைத்து, புகையாதஆவின்பால் தன்னிற்கொள்ள போகும டாஇன்னமுங்கேள் *வீழிப்பத்திரம், துகையாகத்தான்பரித்து வாய் பேசாமல் துவைத்தாவின்பாலிற்கொள் சுகமதாகும், நகைமூன்றுநாட் கொள்ளு அறுநாள்பத்தியம் நாட்சென்றவண்டுகடி நாசமாமே. (௭௦)

---

* வீழி - விழுதி.

ஆச்சடாபூவரசம் பட்டைவாங்கி யடைவாகமேற்புறணி தள்ளிப் போட்டு, நீச்சடாவெண்ணீரி லரைத்துக்கொண்டு நீமூன்றுநாட்கொள் ளு அறுநாட்பத்தியம், ஏச்சடாநாட்சென்ற சிலவிஷங்க ளேகுமடா வண்கெடி விஷக்கரப்பான், போச்சுதடா பத்தியந்தான்கெட்டிகெட்டி புத்தியேயில்லாட்டால் பொய்யாய்ப்போச்சே. (எக)

பொய்யல்லபூவரசின் பத்திரத்தைப் போட்டிடித்து காசெடைதா ன் புகட்டச்சொல்லு, மெய்யடாமண்டலந்தா னிச்சாபத்தியம் விரும்பி வரமுன்சொன்ன விஷங்கள்தீரும், ஐயனேயிம்முறைதான் தொட்டுக் காட்டி லாடலாங்கோடிமட்டு மாடலாகும், செய்வதுதான் பத்திவயிரா க்கியமாக திறமாகவிருந்தாக்காற் சித்தரொப்பே. (எஉ)

வெடிப்பு வெள்ளைக்குத் தயிலம்,

ஓப்பாகச்சொல்லுகிறேன் தயிலப்போக்கு ஓகோகோ சேங்கொட் டைத்தயிலத்தோடு, வெப்பமாய்வெள்ளெருக்குத்தயிலம்புங்கு விரைத்த யிலஞ்சிவன்வேம்புத் தயிலங்கூட்டிச். செப்பமாயிவைநாலுஞ் சமனுய்ச் சேர்த்துத் தினமுமொருகாசிடைதான் மண்டலமேகொள்ளு, அப்ப னேகாயத்தில் வெடிப்புவெள்ளை யதிற்றிடவுதினஞ்சரியஞ்சாறுநாளே.

அஞ்சாறுநாட்சென்று லுடம்புவீங்கும் அப்பனேயேரண்டத் தெ ண்ணெய்மூழ்கு, மிஞ்சாதேபுகபுளியைத் தள்ளிப்போடு மிகக்கோழிக் கறிக்கூட்டு வுப்புங்கூட்டு, நெஞ்சாரச்சொல்கிறே னுள்ளமட்டும் நீகே ளுநல்லெண்ணெய்ப் புண்ணுக்காகா, வஞ்சகங்கள்சொல்லவில்லை விஷ ங்களான வகைவெள்ளைப் புண்புரைகள் வெடிப்புனேடே. (எச)

வெடிப்புடனேகுஷ்டவகை மேகசூலை வெப்புநோய்தனுத்ணையாம் விதங்கள்தானும், கடுகெனவேயோடிவிடுங் காலனென்ற கடுவிஷங்க ளானவகை யெல்லாத்துக்கும், தடிப்புடனேவெள்ளைவகை யுள்ளதெல் லாம் சடத்தைவிட்டப்பாலே தயங்கிநின்று, திடத்துடனேயோடுமடா நோய்களெல்லாந் தேகமதுவச்சிரம்போல் தெளிவுண்டாமே. (எரு)

குஷ்டவகை பதினெட்டுக்கும் சித்தாதிகுழம்பு.

ஆமடாகுஷ்டவகை பதினெட்டுக்கு மறைகிறேன்சித்தாதி குழம்ப தொன்று, ஓமடாதுரிசுதுத்தம் வகையொன்றுக்கு உத்தமனேபலநாலு தாளகமுமாறு, போமடாநேர்வாள மரைபடிதான்கூட்டிப் புகழாகவ ரைப்படியா மணக்கின்முத்து, நேமமுடனிவ்வகைகளெல்லாஞ்சேர்த்து நேத்தியாய்த்திருகுகள்ளிப் பால்விட்டாட்டே. (எசு)

ஆட்டியேகல்வத்திலொரு புறத்திலப்பி யாகாசரவிமுன்னே வைக் கும்போது, நாட்டிலேசொல்லாதே தயிலம்வீழும் நலமானமேதிக்கொ ம்பதனில்மாட்டு, தாட்டிகமாய்குஷ்டவகைப் பதினெட்டுக்குந் தானெ டுத்தீர்க்கியினல் வெற்றிலையிற், பூட்டிவிடுபேதிவிடும்பிறகுஅப்பா புண் ணியமாமோரசனம் பண்ணச்சொல்லே. (எஎ)

சொல்லக்கேள்பாவட்டை மூலம்வாங்கி துடியாகயிலைச்சாற்று லர ட்டிக்கொண்டு, நல்லெண்ணெய்நாழிவிட்டு வேகவைத்து நல்லபதமா கவரும்போதுநீதான், மெல்லகருங்குந்துருக்கம் பொடித்துதூவி மிக்க வேவடிகொண்டு வுள்ளுக்கீந்து, வல்லமையாய்மேலிலிட்டுப் பூசுபூச ண்ணமாகப்புளிகைப்புத் தள்ளிப்போடே. (எஅ)

குஷ்டத்துக்கு நல்லெண்ணெய்.

தள்ளிவிடுஇன்னமுங்கேள் நல்லயெண்ணெய்ச் சாதகமாய்க்குறுணி மத்தஞ்சாறுதாழி, மெள்ளவேபொடுதலையுஞ் செருப்படியுங்கூட்டி மிக வரைத்து நார்த்தங்காய் வீதமாக, உள்ளபடியெண்ணெயிலே போட்டுக்கிண்டி யூதியெரித்தேபதத்தில் வடித்துக்கொண்டு, கள்ளமில்லைக் கொடுத்துவிடுமேலும்பூசு கைப்புளிப்புப்பூசினிக்காய்ச் சுரையாகாதே.

சகலவிஷத்துக்கும் கருடாஞ்சனம்.

ஆகாதுபத்தியமே கெட்டிகெட்டி யடியோடேயோடிவிடுங் குஷ்ட ரோகம், நோகாதுதேகமது கற்றூணுகும் நுணுக்கமடாசொல்லார்கள் கோடியீந்தும், வாகாககெருடவாஞ் சனத்தைக்கேளு வன்மிளகுசெம் பருந்தின் முட்டைக்குள்ளே, மோகமாய்த்தானடைத்து மூன்றுநாளு முக்கியமாய்புடைதத்துஅதை மூடிவையே. (அ0)

வையதனைத் * தலைவிரித்தான் சாற்றிலாட்டி வழித்துவைப்பாய் மேதிக்கொம்பதனிலேதான், வெய்யவிடந்தலைக்கொண்டு மிஞ்சிற்றூல் விழிகள்ரெண்டிலேயெழுத விஷங்களோடும், ஐயனேசொல்லக் கேளஞ்சனத்தை யாருமுறைசெய்யார்க ளவனிமீது, துய்யபிரானந்தி சொன்ன முறைதானப்பா சூக்ஷமாமனதில்வைத்துப் பாருபாரே. (அக)

சகலவிஷத்துக்கும் நசியம்.

பாரப்பாகாஞ்சிரையின் வேரைத்தோண்டி பரிவாகப்பெருங்காயங் கூட்டிக்கொண்டு, சேரப்பாகாட்டெருமைப் பால்விட்டாட்டிச் சேர்த்தரைத்து வுண்டைபண்ணித் தியானஞ்செய்து, ஊரப்பாவிடங்கடித்த வாயிற்பூசு வுயர்ந்துவிடந்தலைக்கொண் டுயிர்விட்டாலும், தீரப்பாவுரைத்துவிடுநாசிரண்டில் திறமாகவெழுந்திருப்பான் திறமாய்ச்சொல்லே. ()

சகலவிஷத்துக்கும் கலிக்கம்.

சொல்லக்கேள்பாஷாணக்கலிக்கந்தானுந் துடுக்கடாஅண்டவெள்ளைக் கருவினுள்ளே, நல்ல ‡ மகிழுமிஞ்சிவித்துத் துருசுதுத்தம் நலமானமுருங்கைவித் தரைப்புக்கட்டி, மெள்ளவேமிளகதுவும்பலமேகூட்டி மிகச்சமனாய்ப் பழச்சாற்றி லாட்டிக்கொண்டு, வல்லமையா யுண்டைபண்ணிவைத்துக்கொண்டு வல்விஷங்கள் தீண்டிமண்டைக்கொண்டாற்கேளே. (அங)

கேளடாவெற்றிலைச்சாற் சிறுநீராதல் கிருபையுடன்கண்ணிலிட்டு வுச்சிக்கீறி, மீளவொருவுண்டைகையான்சாற்றிலாட்டி வேகமாய்த்தேய்த்ததனில் தியானஞ்சொல்லு, பாளடாவிஷங்களெல்லாம்பறந்துபோக்சு பார்ப்பதற்கோவெகுசுருக்கு வேகமெத்த,தாழ்வொன்றும்வாராது விஷத்தினலே சாவரிது சாவரிது திறஞ்சொன்னோமே. (அச)

பிரப்பங்கோல்.

சொன்னதுதானென்னவென்றாற் சுடலைதன்னில் தூக்கிவைத்துக் கட்டையின்மே லிடும்பிணத்தின், மன்னியவாய்தனிற் காவிச்செம்புக் காசு வைத்துமேமார்புதனில்வங்கம்வைத்து,மின்னிடவேதகடடித்துப் பிரப்பங்கோலில் மிக்கவேயொருதலையிற்பூணுய்க்கட்டிப்,பன்னியதோர்வங்கமதைத் தகடாய்த்தட்டிப் பரிவாகமறுதலையிற் பதித்திடாயே. ()

---

* தலைவிரித்தான் - சாரணை. ‡ மகிழ - மகிழம்வித்து

பதித்திட்டபிரப்பங்கோல் தன்னைவாங்கிப் பாம்புப்பெட்டியின்மேல் தட்டும்போது, குதித்திட்டநாகமது காணுதப்பா குணமாகப்பெட்டி தனைமறுகால்மூடி, குதித்திட்டுவெங்கமிட்டப் புறத்தால்தட்டிக் கொடிய பெட்டித்தனைத்திறக்கக் கோபங்கொண்டு, அதிர்த்திட்டநாகமதுநின் றேயாடு மப்பனேயதிசயத்தை யறிந்துபாரே. (அசு)

ச-வி-ம், மோதிரம்.

பாரடாமோதிரமு மொன்றுசெய்யப் பகருவேன்கேளப்பா பாரின் மீது, நேரடா * பச்சோந்திப்பச்சைப்பாம்பு நெடியவால்முனைரெண்டும் நறுக்கிக்கொண்டு, சீரடா ‡ கதிரவனாள்செம்புதட்டி சிவசிவாவென்று வொரு மோதிரத்தைச்செய்து, ஆருடனுஞ்சொல்லாமல் முனைவால்ரெண்டு மப்பனேமாறும லதினுள்வையே. (அஎ)

வைத்ததனைமோதிரம்போ லுருட்டிக்கொண்டு வலதுகையின் பெருவிரலில் மாட்டிக்கொண்டு, பைத்துடனேநாகமதைத் தூக்கும்போது பழுதையைப்போற் கிடக்குமடாகடியாதுன்னை, எத்தலத்தில் மிதித்தாலுங் கடிக்காதையா இதுவல்லோசித்தர்கையிலிருக்கவேணும், வெற்றியடா இம்முறைபோற் கண்டதில்லை வெகுசுளுகு வெகுசுளுகு விரைந்துபாரே. (அஅ)

ச-வி-ம், செம்முள்ளிமோதிரம்.

பாரப்பாசெம்முள்ளி செடியைப்பார்த்துப் பிரிவாகச்செவ்வாயிற் காப்புக்கட்டி, நேரப்பாமறுசெவ்வாய்ப் பிடிக்கும்போது நினைவாகப்பூசித்துப் பலிகொடுத்து, சீரப்பாசாபத்தை நிவர்த்திசெய்து திறமாகவடவேறு தன்னைவாங்கி, சாரப்பாதாம்பிரத்தின் தகட்டினுள்ளே தான்வைத்துமோதிரம்போ லுருட்டிக்கொள்ளே. (அகூ)

உருட்டியதோர்மோதிரத்தைவைத்துக்கொண்டு வுயர்ந்தவிடந்தூண்டிற்றென்றேடிவந்தால், மருட்டியந்தமோதிரத்தைக்குடத்தின்மீது மாட்டியேநீரிறைக்க விரைந்தேயேறும், அருட்டியதோர்விஷந்தன்னையிறக்கவேண்டி லவ்வளையமோதிரத்தையெடுத்துக்கொண்டு, பிரட்டாம†லத்தழையைக்கசக்கிக்கொண்டு பிழிந்துவிடுவலக்காதில்பிலக்கத்தானே.

பிழிந்துவிடப்போகுமடா அட்டநாகம் பெருவிரியனுடன்விஷங்கள்பேசாதோடும், அழிந்துவிடவிஷமெல்லா மய்னிமீது அரைநாழிகைத்தரியாத் தரனார்சொன்னார், தெளிந்துவிடமந்திரந்தா னென்றுசொல்வேன் செப்புவதுமரிதப்பா திறங்கேட்டோர்க்கு, ஒழிந்துவிடுமெகாகெருடாய்சிவயநமவென்று வுறுதியாய்மனமுரைத்தோதுவோதே. ()

ஓதுவாயொருலக்ஷஞ்செபித்துக்கொண்டா லோடிவருவான்கெருடனுறுதியாக, வாதுசொல்விவிஷந்தனையே வாங்குவான்காண் மகத்தானமந்திரந்தான் மவுனமாக, நீதமுடனேதுவதுசிவாலயஞ்சுடலை நெறிதவிராநதிக்கரையில் நீதான்சென்று, போதமுடனந்திசந்தி செபிக்கவேணும் புண்ணியமாமந்திரத்தின் புதுமைதானே. (கூஉ)

ச-வி-ம், செவ்வலரிவேர்.

தானென்றசெவ்வலரி வேருக்கப்பா சாம்புறுணிதூபமிட்டுக் காப்புக்கட்டி, ஞானமுடன்கதிரவனாள்பலிகொடுத்து நலமாகவேர்பிடுங்கிக்

---

* பச்சோந்தி-பச்சைஓணான். ‡ கதிரவனாள்-ஞாயிற்றுக்கிழமை.

† லத்தழை - செம்முள்ளி.

குளிசமாடி, நீநினைவாய் வைத்துக்கொண் டுலகமெய்க்க நியமமுடனொ ருதலத்தி லிருந்துகொண்டு, ஏமமுடன்ஓம்சிவய்நம நாராயணாவென்று யியல்பாகலட்சமுரு வேற்றிக்கொள்ளே. (சுந)

உருவேற்றிக்கொள்ளவுமேயரவம்வந்து உயர்ந்தவிடந்தனைக்கடித்து வாங்கிப்போகும், திரும்பவுமேயிருநூறுசெபிக்கும்போது திறமாகப்பு ற்றைவிட்டு வந்தேயாடும், அருந்தவஞ்செய்முனிவோர்கள்செய்யும்வித் தை யதிசயமாமிப்பொருளை யாருஞ்சொல்லார், பெருமையில்லாவணக் கமது செய்யுகின்ற பிள்ளைகளுக்குரைத்திடுவாய்ப் பெருமைதானே. ()

தாமென்றஓம்புரூங்குரோந்தயவாக விள்ளுமடாபிரளய சவாகா வென்று, நேமமுடனேயுரைத்து ரண்டுலக்ஷம் நினைவாகவுருவேற்றிச் செபித்துக்கொண்டு, ஓமென்று நூற்றெட்டுவுருவைச்சொல்ல ஓடிவிடும் நங்களெல்லா முலகம்விட்டு, தாமதங்கள்வாராது விடந்தீண்டாது சவுமியமாமந்திரத்தின் திறங்கள்தானே. (சுரு)

திறமாகுங்குருமுறையாய்க் காட்டவேணும் நீதற்றப்பெரியோர்க் குதிரமாயக்காணும், அறம்வேணுமில்லாட்டால் விழலாய்ப்போகும்ஆத் தாளைப்பூசித்தா லாகுமாகும், உறம்வேணுஞ்சாஸ்திரத்தைக் காட்டொ ணாதுவுலகத்தில்மாண்பருக் குரைக்கொணாது, நறுமலரும்வாசம்போற் சீஷன்கண்டால் நன்றாகவருடமொன்று மனஞ்சோதித்தே. (சுசு)

சோதித்தேயிம்முறைபோ லுபதேசஞ்செய் சுத்தபரிபூரணத்தைச் சொல்வாள் சொல்வாள், ஆதியான்சத்தியா ரூடத்தைப்போலும் ஆரு முறைசெய்யவில்லை யப்பாகேளு, நீதிமுறைதப்பாமற் பார்ப்பாராகில் நிச்சயமாயிம்மருந்து முன்னின்றாடும், பேதமில்லைகெதிமோட்சம் பெற் றுவாழ்வாய் பெரியதனமுண்டாகும் பிரபலமுமாமே. (சுஎ)

ஆமடாசத்தியாரூடந்தன்னி லஞ்சனமாத்திரைக்குழம்புலேகியங்க ள், ஓமடாவெகுகுளிசமோதிரந்தா னுத்தமமாமந்திரங்கள்குடோரிவித் தை, நாமடாசொல்லிவிட்டோம் விஷத்தினாலே லயமொன்றும்வாராது சாவோயில்லை, போமடாவிஷமெல்லாம் புகைபோலோடும் புண்ணியந் தானாகுமடா புகழுண்டாமே. (சுஅ)

உண்டாகுமொருநினைவா யிருக்கவேணு முறுதியுள்ளபேர்களுக்கு ரைக்கவேணும், கண்டவிடந்தன்னிலேபேசொணாது கசடருக்கொருக் காலுங் காட்டொணாது, வண்டராயிருப்பவருக் குரைக்கொணாது வாயி பதம்போற்றார்க்குச் சொல்லொணாது, திண்டுமுண்டுபேசிவரும்சண்டா ளர்க்கு தீக்ஷையதுவொருக்காலுஞ் செப்பொணாதே. (சுகூ)

செப்பனவே வந்துவந்தனைகள்செய்து ஜெகஜாலக்கூத்தாடித் திரி வான்மட்டை, அப்புறம்போய்ப்பொய்யென்பா னறிந்தோமென்பா ரா ருமெனக்கெதிரில்லை யென்பார்பாரு, தப்புரைசெய்மாண்பருக்குச் சா ற்றிடாதே, சபித்திடுவார்சித்தரப்பா க்ஷணத்திலேதான், ஒப்புவதுமன தறியா தோதுவீரா லுனக்குவருஞ்சாபமென் றுரைத்திட்டாளே. (க00)

உரைத்திட்டேன்மனதறிந் தோதுவோது ஓகோகோபராபரையா ளுரைத்தவித்தை, நிறைந்திட்டமனத்துள்வந்து நிர்த்தஞ்செய்வாள் நீடே ழிகாலமட்டும் நீயேசித்தன், அறைந்திட்டஅவிழ்தத்தின் வகைகட்கெல் லா மாகுமடாபத்தியந்தான் கெட்டிகெட்டி, விரைந்திட்டுமனதுபற்றிப் பார்க்கவல்லோன் வேதனுக்குஒப்பெனவும் விரித்திட்டேனே. (க0க)

விரித்திட்டசத்தியாரூடமான விருத்தமதுவொருநூறும் வேதமாகும், வருத்தமாய்மனம்பற்றி பார்ப்பானுகில் மாநிதியம்பெற்றுமண்மேல் வாழ்வான்பாரு, தரித்திரங்களணுகாது தர்மமுண்டாம் தாரணியிற் சித்தர்வந்து தருவார்புத்தி, கருத்துடனேயாத்தாளு மையர்தானுங் காக்ஷிதருவார்களொரு நூறுமுற்றே. (௧௦௨)

உமாமகேஸ்வரி அகஸ்தியமுனிவருக்கு அருளிச்செய்த

சத்தியாரூடம் - முற்றிற்று.
